DINAKARAN
24 FEB 2022
PAGE 7



# ₹1.42 கோடி செலவில் புதுவை பல்கலைக்கழகத்தில் உள்விளையாட்டு அரங்கம்

## கவர்னர் தமிழிசை திறந்து வைத்தார்

காலாப்பட்டு, பிப். 24: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சர்வதேச தரத்திலான வசதிகளுடன் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் ரூ.1.42 கோடியில் புதிதாக நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உள்விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டு உள்விளையாட்டு அரங்கை திறந்து வைத்து பேசியதாவது:

இந்த உள்விளையாட்டு அரங்கம் மாணவர்களையும், பேராசிரியர்களையும் ஊக்கப்படுத்தும். இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் ஒலிம்பிக் போட்டி, ஆசிய விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் பங்கு பெறும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டுகளிலும் ஆர்வத்தோடு கலந்து கொள்ள இதுபோன்ற விளையாட்டு அரங்கங்கள் ஊக்கப்படுத்தும். அதுவே இன்றைய காலக்கட்டத்தின் தேவை. கொரோனா காலக்கட்டத்தில் உடல் ஆரோக்கியத்தையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் நாம் வளர்த்துக்கொள்ள இது உதவும். இந்த வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பேராசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். மகாகவி பாரதி கூறியது போல காலை படிப்பில் மட்டுமல்லாமல், விளையாட்டுகளில் ஈடுபடவும் ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வெல்ல முடியும். உடல் வலிமையையும் மன வலிமையையும் அவர்கள் மேம்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில் பல்கலைக்கழக இயக்குநர் பாலகிருஷ்ணன், கலாசார துறை சிறப்பு அதிகாரி ராஜீவ் ஜெயின் மற்றும் புல முதன்மைகள், துறை தலைவர்கள், அதிகாரிகள், மாணவர்கள் கலந்து கொண்டனர். பதிவாளர் அமரேஷ் சமந்திராயா நன்றி கூறினார்.




புதுவை பல்கலைக்கழகத்தில் சர்வதேச தரத்தில் கட்டப்பட்ட உள்விளையாட்டு அரங்கை கவர்னர் தமிழிசை திறந்து வைத்தார். அருகில் துணைவேந்தர் குர்மீத் சிங்.

THE HINDU (TAMIL)

24 FEB 2022

PAGE 3





## புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில்

# சுபாஷ் சந்திர போஸ் உள்விளையாட்டு அரங்கம் திறப்பு

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் சர்வதேச தரத்தில் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் சுமார் ரூ. 1 கோடியே 42 லட்சம் செலவில் புதிதாக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள்விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் உள்விளை யாட்டு அரங்கினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

விழாவில் ஆளுநர் தமிழிசை பேசுகையில், "உள்விளையாட்டு அரங்கத்துக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பெயரை வைத்ததற்காக துணைவேந்தரை பாராட்டுகிறேன். ஒரு இளைஞராக இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டதோடு மற்றவர்களையும் அதில் பங்கு கொள்ளச் செய்தவர் சுபாஷ் சந்திர போஸ். அந்த பெயர் ஒன்றே பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும்.

சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய ராணுவத்தை தொடங்கியபோது ஜப்பான், பர்மா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலிருந்து போர் வீரர்களை படையில் சேர்த்து மன உறுதியோடு இந்திய விடுதலைக்குப் பாடுபட்டார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸையும், அவரது விடுதலை உணர்வையும் கவுரவிக்கும் வகையில் பிரதமர் டெல்லி இந்தியா கேட் பகுதியில் அவருக்கு சிலையை நிறுவினார். இந்த உள்விளையாட்டு அரங்கம் மாணவர்களையும், பேராசிரியர்களையும் ஊக்கப்படுத்தும். இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் ஒலிம்பிக் போட்டி, ஆசிய விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் பங்கு பெறும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.



▲ புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் புதிய உள்விளையாட்டு அரங்கை திறந்து வைத்த ஆளுநர் தமிழிசை, அதில் விளையாடி மகிழ்கிறார்.

அண்மைக் காலமாக ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவுக்கான அங்கீகாரம் கிடைத்து வருகிறது.

ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பு நிலைமை வேறு விதமாக இருந்தது. தற்போது பிரதமர், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் போன்றவர்களின் முயற்சியால் குழந்தைகளும், இளைஞர்களும் ஊக்குவிக்கப்பட்டு பதக்கங்களை வென்று வருகின்றனர்.

மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டுகளிலும் ஆர்வத்தோடு கலந்து கொள்ள இதுபோன்ற விளையாட்டு அரங்கங்கள் ஊக்கப்படுத்தும். அதுவே இன்றைய காலக் கட்டத்தின் தேவை.

கரோனா காலக் கட்டத்தில் உடல் ஆரோக்கியத்தையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் நாம் வளர்த்துக்கொள்ள இது உதவும்.

பெருந்தொற்றுக் காலத்தில் நம்முடைய கல்வி முறையிலும், செயல்பாடுகளிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய உடல் ஆரோக்கியத்தையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. மாணவர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பேராசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். மகாகவி பாரதி கூறியது போல காலை படிப்பில் மட்டுமல்லாமல், விளையாட்டுகளில் ஈடுபடவும் ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வெல்ல முடியும்" என்று கூறினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

DINATHANTHI

24 FEB 2022

PAGE 9



புதுவை பல்கலைக்கழகத்தில்

# ரூ.1.42 கோடியில் உள் விளையாட்டு அரங்கம்

## கவர்னர் தமிழிசை திறந்து வைத்தார்

புதுச்சேரி, பிப்.24-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ரூ.1 கோடியே 42 லட்சம் செலவில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. விழாவிற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார்.

கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்துகொண்டு புதிய உள்விளையாட்டு அரங்கை திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில், மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டுகளிலும் ஆர்வத்தோடு கலந்துகொள்ள இது போன்ற விளையாட்டு அரங்குகள் ஊக்கப்படுத்தும். கொரோனா காலக்கட்டத்தில் உடல் ஆரோக்கியத்தையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் நாம் வளர்த்துக்கொள்ள விளையாட்டு உதவும் என்று குறிப்பிட்டார்.

விழாவில் பல்கலைக்கழக பதிவாளர் அமரேஷ் சமந்திராயா, இயக்குனர் பாலகிருஷ்ணன், கலாசார துறை அதிகாரி ராஜீவ் ஜெயன் மற்றும் பல்கலைக்கழக டீன்கள், துறை தலைவர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

DINAMALAR

24 FEB 2022

PAGE 4

www.dinamalar.c
புதுச்
• வியாழன் • பிப்ரவரி 24 2

# விளையாட்டில் ஈடுபட மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்: கவர்னர்

**புதுச்சேரி, பிப். 24–**

'கொரோனா காலகட்டத்தில் அனைவரும் உடல் ஆரோக்கியம், நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்' என கவர்னர் தமிழிசை பேசினார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் சர்வதேச தரத்தில், ரூ. 1 கோடியே 42 லட்சம் செலவில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள் விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

இதனை, துணைவேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில் கவர்னர் தமிழிசை நேற்று திறந்து வைத்து, இறகுபந்து போட்டியை துவக்கி வைத்தார்.



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 1.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட உள்விளையாட்டு அரங்கினை கவர்னர் தமிழிசை திறந்து வைத்து, இறகுபந்து போட்டியை துவக்கி வைத்தார். அருகில் துணைவேந்தர் குர்மீத் சிங்.

விழாவில் கவர்னர் தமிழிசை பேசியதாவது:

ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் பங்கு பெறும் வகையில் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அண்மைக் காலமாக ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிற்கு அங்கிகாரம் கிடைத்து வருகிறது.

ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பு நிலைமை வேறு விதமாக இருந்தது. தற்போது,பிரதமர், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர், பல்கலைகழக துணைவேந்தர்கள் போன்றோர் முயற்சியால் குழந்தைகளும் இளைஞர்களும் ஊக்குவிக்கப்பட்டு, பதக்கம் வென்று வருகின்றனர்.

கொரோனா கால கட்டத்தில் உடல் ஆரோக்கியம், நோய் எதிர்ப்பு சக்தியை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பெருந்தொற்று காலத்தில் நம் கல்வி முறையிலும் செயல்பாடுகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

படிப்பில் மட்டுமல்லாமல் விளையாட்டுகளில் ஈடுபடவும் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதன் மூலம் உடல் வலிமை, மன வலிமையை அவர்கள் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறு கவர்னர் பேசினார்.

DINAMALAR

24 FEB 2022

PAGE 4

# மாணவர்களுக்கு ஆன்லைன் தேர்வு துணைவேந்தரிடம் அமைச்சர் மனு

**புதுச்சேரி, பிப். 24–**

கல்லுாரி மாணவர்களுக்கு ஆன்லைன் தேர்வு நடத்த, கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம், பல்கலைக்கழக துணை வேந்தரை நேரில் சந்தித்து வலியுறுத்தி'னார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கலை,அறிவியல் கல்லுாரி மாணவர்களுக்கு, மார்ச் மாதம் செமஸ்டர் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா காரணமாக ஜனவரி மாதம் கல்லுாரிகளுக்கு விடுமுறை அளித்து, ஆன்லைன் மூலம் வகுப்பு நடந்தது.

இதனால், தங்களுக்கு ஆன்லைன் மூலம் தேர்வு நடத்த வேண்டும் என கோரி, பல்வேறு கல்லுாரி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தினந்தோறும் சில கல்லுாரி மாணவ மாணவிகள் போராட்டம், பேரணி என கல்லுாரியை புறக்கணித்து வருகின்றனர்.

இந்நிலையில், கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் நேற்று புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங்கை சந்தித்து பேசினார். அப்போது, கல்லுாரி மாணவர்களுக்கு ஆன்லைன் தேர்வு நடத்த வலியுறுத்தியதுடன், மனுவும் அளித்தார்.



ஆன்லைன் மூலம் தேர்வு நடத்தக் கோரி, கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம், புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங்கிடம் மனு அளித்தார்.

DINAMANI

24 FEB 2022

PAGE 3

# புதுச்சேரி பல்கலை.யில் ரூ.1.42 கோடியில் உள்விளையாட்டரங்கம் திறப்பு

**புதுச்சேரி, பிப். 23:** புதுச்சேரி பல்கலைக் கழக வளாகத்தில் ரூ.1.42 கோடி மதிப்பில் உலகத்தரத்திலான புதிய உள் விளையாட்டரங்கம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இங்குள்ள சர்வதேச தரத்திலான வசதிகளுடன் கூடிய திருவள்ளுவர் விளையாட்டு மைதானம் அருகே ரூ.1 கோடியே 42 லட்சம் செலவில், புதிதாக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள்விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது. 631.44 சதுர மீட்டர் சுற்றளவில் அமைந்துள்ள இந்த உலகத் தரத்திலான உள்விளையாட்டரங்கின் திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன் பங்கேற்று, உள் விளையாட்டு அரங்கைத் திறந்து வைத்து இறகுப்பந்து விளையாடினார். விழாவில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங், பல்கலை. பதிவாளர் அமரேஷ்சமந்திராயா, இயக்குநர் பாலகிருஷ்ணன், கலாசார துறை சிறப்பு அதிகாரி ராஜிவ் ஜெயின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

DINAKARAN

24 FEB 2022

PAGE 5

# ஆன்லைன் தேர்வு நடத்த கோரி மனு



புதுச்சேரியில் கல்லூரி மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் தேர்வு நடத்த கோரி மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கை சந்தித்து கல்வி அமைச்சர் நமச்சிவாயம் மனு அளித்தார்.

DINA THANTHI

23 FEB 2022

PAGE 7



# புதுவை பல்கலைக்கழகத்தில் கிரிக்கெட் போட்டி

புதுச்சேரி, பிப்.23-

புதுவை பல்கலைக்கழக ஊழியர்களுக்கான டென்னிஸ் பால் கிரிக்கெட் போட்டி ராஜீவ்காந்தி மைதானத்தில் 4 நாட்கள் நடந்தது. போட்டிகளை பல்கலைக்கழக இணை டீன்ரியா சுதீன் தொடங்கிவைத்தார். ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் தனித்தனி அணியாக கலந்துகொண்டு விளையாடினர். லீக் மற்றும் நாக் அவுட் முறையில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பல்கலைக்கழக டீன் கிளமெண்ட் சகாயராஜ் சான்றிதழ்கள், பதக்கங்களை வழங்கி பாராட்டினார். மின்சார, பாதுகாப்பு, நிர்வாக ஊழியர்கள் அணி முறையே முதல் 3 இடங்களை பிடித்தன.

நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் உடற்கல்வி உதவி பேராசிரியர் ராம்மோகன் சிங், பேராசிரியர்கள் சுல்தானா, இளையராஜா, உதவி பேராசிரியர் பிரவீன் உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் உடற்கல்வி பேராசிரியர் வினோத்குமார் நன்றி கூறினார். முன்னதாக விளையாட்டு துறை இயக்குனர் (பொறுப்பு) வசந்தி அனைவரையும் வரவேற்றார்.

டுக்குள் அனுமதிக்க முடியாது. அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும்படி அறிவுறுத்தினர். அவர்களது வயது பிரிவினருக்கு இந்தியாவில் இன்னும் கொரோனா தடுப்பூசி போடும் பணி தொடங்கவில்லை. அதனால் தான் அவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்று அதிகாரிகளிடம் பல முறை எடுத்து கூறியும் கேட்கவில்லை. திரும்பி செல்வதற்கு உடனடியாக விமானம் இல்லாததால் உள்ளூர் அதிகாரிகளுடன் பேசுவதற்கு எங்களுக்கு வசதியாக அமைந்தது. இதையடுத்து வீரர்களுடனே தங்குவது என்று முடிவு செய்தேன். விமான நிலையம் அருகில் உள்ள ஓட்டலில் நாங்கள் தங்கினோம். இந்த விவகாரத்தால் 24 மணி நேரத்திற்கு

THE NEW INDIAN EXPRESS

24 FEB 2022

PAGE 3

EXPRESS READ

## Tamilisai inaugurates Netaji indoor stadium

Puducherry: A new indoor stadium of Pondicherry University, Netaji Subhas Chandra Bose, with state-of-the art facilities was inaugurated by Lt Governor Dr Tamilisai Soundararajan on Wednesday. The Lt Governor stressed the fact that the faculty should motivate the students to take part in sports. ENS